செய்தி வெளியீடு எண்: 46 தேதி: 30.09.2024

**தமிழ்நாடு ஆளுநர் மாளிகை சார்பாக 'உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள் விழா' சென்னை காந்தி மண்டபத்தில் (02.10.2024) அன்று நடைபெறவுள்ளது, இவ்விழாவில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்பதற்கான அழைப்பு**

தமிழ்நாடு ஆளுநர் மாளிகையின் சார்பாக, 02 அக்டோபர் 2024 (புதன்கிழமை) அன்று காலை 10:00 மணியவில் சென்னை காந்தி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களை அழைப்பதில் தமிழ்நாடு ஆளுநர் மாளிகை மகிழ்ச்சி அடைகிறது. மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, அவர்கள் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சென்னை காதி கிராமோத்யோக் பவன், திண்டுக்கல் காந்திகிராம் அறக்கட்டளை ஆகியவற்றின் காதி பொருட்கள் மற்றும் ஆயுர்வேத மருந்துகள், தென்காசி அவ்வை ஆசிரமத்தின் மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் தென்காசி அமர் சேவா சங்கத்தின் சிறப்புக் குழந்தைகளால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் இவ்வரங்கத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளது. இவ்வரங்குகளை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் தொடங்கி வைத்து பார்வையிடவுள்ளார்கள்.

சென்னை காதி கிராமோத்யோக் பவன் நடத்திய மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் பரிசுகளை வழங்குகிறார். இந்நிகழ்ச்சியில், சர்வோதயா உறுப்பினர்களால் இராட்டை நூல் நூற்பு மற்றும் சென்னை பாரதிய வித்யா பவன் பள்ளி மாணவர்களின் கீர்த்தனை பாடல்கள் ஆகியவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும், உத்தமர் காந்தியடிகளின் அகிம்சை, உண்மை, சுய ஒழுக்கம் மற்றும் சேவை ஆகிய கொள்கைகளை மேம்படுத்துவதில் சிறப்பாக பங்காற்றிய காந்தியவாதிகள் மற்றும் நாட்டின் தூய்மைக்காக பணியாற்றும் துப்புரவு பணியாளர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப்பட உள்ளார்கள்.

இளம் தலைமுறையினரிடையே அர்ப்பணிப்பு மற்றும் சேவை மனப்பான்மையை ஊக்குவித்து உத்தமர் காந்தியடிகளின் காலத்தால் அழியாத சிந்தனைகளை பரப்பி, நல்லிணக்கம் மற்றும் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க, ஆர்வமுள்ள தனிநபர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

........................................................................................................................

ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு — வெளியிட்டது/--

தேதி: 30.09.2024 — மக்கள் தொடர்பு அலுவலகம்